# சென்னை மாநகராட்சி சார்நிலை பணிகளுக்கான வரைவு துணை விதிகள்–2009
## திருத்தப்பட்ட பொதுப் பணி விதிகள்
*****

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப் பட்ட தகுதிகள் | ஊதிய விகிதம் மற்றும் நிர்ணய நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | நிர்வாக அலுவலர் | கண்காணிப்பாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்<br><br>(பட்டதாரிகள், பட்டதாரி அல்லாதோர், 1:1 என்ற விகிதத்தில்) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு பட்டம்<br><br>($10^{th}$ – $12^{th}$ – UG –PG) | ரூ.9300–34800+நிலை ஊதியம் ரூ.4900 அட்டவணை எண்.15<br>நிர்ணய நாள்<br>ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 1ம் நாள் | பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு |
| 2 | கண் காணிப்பாளர் | 1. உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–2, தொகுப்பாளர் மற்றும் எழுத்தர், உதவி பணப்பொறுப்பாளர், உதவி பண்டக காப்பாளர் மற்றும் உதவியாளர் மற்றும் பண்டக காப்பாளர், டேட்டா பிரிண்டர் ஆகிய பதவியிடங்களில் இருந்து பதவி உயர்வு மூலம்.<br><br>2. பிரிவு மேலாளர், சுருக்கெழுத்துத் தட்டச்சர்– நிலை–1, தலைமை பணப் பொருப்பாளர், மற்றும் பண்டகக் காப்பாளர் ஆகிய பதவியிடங்களில் இருந்து பதவி வகை மாற்றம் மூலம் நியமனம். | 1) குறைந்தபட்ச பொதுக்கல்வி தகுதி<br><br>2) சார்நிலை பணியாளர் களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் 2. மற்றும் தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வில் தேர்ச்சி<br><br>3) குறைந்த பட்சம் ஓர் ஆண்டு நிர்வாகத் துறையில் இளநிலை உதவியாளராகவோ அல்லது உதவியாளராகவோ பணியாற்றியிருக்க வேண்டும்<br><br>4, மன்றத் தீர்மான எண் 410/2009. நாள் 29.10.2009 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை1 மற்றும் 2, கண்காணிப்பாளர் பதவி உயர்விற்கு அத்தீர்மானத்தில் அடிப்படையில் (19:1என்ற விகிதாச்சாரம்) நடைமுறைப்படுத்தப்படும் இவர்களுக்கு பயிற்சி காலம் ஓர் ஆண்டு ஆகும் | ரூ.9300–34800+நிலை ஊதியம் ரூ.4800 அட்டவணை எண்.12<br><br>நிர்ணய நாள்<br>ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 1ம் நாள் | 1.அனைத்து பிரிவு மேலாளர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1, தலைமை பணப் பொறுப்பாளர், மற்றும் பண்டகக் காப்பாளர், ஆகிய பதவிகள் கண் காணிப்பாளராக ஒருங்கிணைக்கப் படுகிறது<br><br>2. பதவி உயர்வுக்கு ஊட்டப் பதவியின் முது நிலையின் அடிப்படையில் பணிமூப்பு அறுதியிடப்படும். |
| 3 | உதவியாளர் | 1. இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்கள் ஆகிய பதவிகளில் 3:1 என்ற விகிதாசார அடிப்படையில் பதவி உயர்வு<br>( 3 இளநிலை உதவியாளர் 1 தட்டச்சர் )<br><br>2. இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவியில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் | 1) குறைந்த பட்ச பொது கல்வி தகுதி<br><br>2) சார்நிலை பணியாளர் களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வில் தேர்ச்சி | ரூ.5200–20200+நிலை ஊதியம் ரூ.2800 அட்டவணை எண்.8<br><br>நிர்ணய நாள்<br>ஒவ்வோர் ஆண்டும் ஜூலை1ம் நாள் | 1) உதவியாளர், உதவி பண்டக காப்பாளர், உதவி பணப்பொறுப்பாளர், தொகுப்பாளர் மற்றும் எழுத்தர், டேட்டா பிரிண்டர் ஆகியோர் பொதுவான பணிவகையினை சேர்ந்தவராக கருதப்பட வேண்டும்.<br><br>2. பதவி உயர்வுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பணிபுரிந்திருக்க வேண்டும்<br><br>3. வேலை வாய்ப்பகம் மூலம் நேரடி நியமனம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு பட்டம்<br><br>கணினிப் பயிற்சியில் தகுதி பெற்றோருக்கு முன்னுரிமை<br><br>மேற்குறிப்பிட்ட துறைத் தேர்வுகளில் இரண்டாண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும் | | ஊட்டப் பதவியின் முது நிலையின் அடிப்படையில் பணிமூப்பு அறுதியிடப்படும்.<br><br>3) ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஊட்டப் பதவியில் இருந்து தகுதியான பணியாளர்கள் அனைவரையும் பதவி உயர்வு செய்த பின்னர், அதே ஆண்டில் எஞ்சிய காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும். |
| 4 | இளநிலை உதவியாளர் | 1. அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலம். தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்<br><br>2. கீழ்நிலைப் பதவியில் 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும்<br><br>3. பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிநியமனம் செய்யப்பட்ட பதவியில் 3 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்<br><br>4. நேரடி நியமனம் மூலமாக வேலை வாய்ப்பகத்தால் பரிந்துரைக்கப்பட்ட பட்டதாரிகள்<br><br>5. கருணை அடிப்படையில் பணிநியமனம், (பணிக்காலத்தில் காலஞ்சென்ற மாநகராட்சிப் பணியாளரின் சட்டபூர்வ வாரிசுதாரர்கள் (பட்டதாரிகள் மட்டுமே பணி நியமனத்திற்குத் தகுதியானவர்கள்) | குறைந்தபட்ச பொது கல்வி தகுதி | ரூ.5200–20200+ நிலை ஊதியம் ரூ.2400<br><br><u>நிர்ணய நாள்</u> ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 1 நாள் | 1. இளநிலை உதவியாளர் கள், தொலைபேசி இயக்குபவர் பொதுவான பணி வகையினை சேர்ந்தவர் களாக கருதப்பட வேண்டும். (Common category / Inter-changeable Post)<br><br>2. பதவி உயர்வுக்கு ஊட்டப் பதவியின் முது நிலையின் அடிப்படையில் பணிமூப்பு அறுதியிடப்படும்.<br><br>3. பதவி உயர்வு, மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாசாரம் 1:1 |
| 5 | தொலைபேசி இயக்குபவர் | 1. பதிவுரு எழுத்தர் பதவியில் இரண்டாண்டு தகுதி காண் பருவம் முடித்தவர்கள்<br><br>2, நேரடி நியமனம் மூலம் | குறைந்த பட்ச கல்வித் தகுதி<br><br>தொலைபேசி இயக்குபவர் பதவிக்குறிய பயிற்சி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் | ரூ.5200–20200+ நிலை ஊதியம் ரூ.2400 அட்டவணை எண்.6 <u>நிர்ணய நாள்</u> ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 1ம் நாள் | <u>தொலைபேசி இயக்குபவர்கள் அப்பதவியில் இரண்டு ஆண்டு காலம் பணி செய்து இளநிலை உதவியாளராக பதவி மாற்றம் பெற்று 1 ஆண்டு பணிபுரிந்த பின்னரே அடுத்த நிலை பதவி உயர்வில் செல்ல இயலும்</u> |
| 6 | பதிவுரு எழுத்தர் | 1) பணிக்காலத்தில் காலம் சென்ற மாநகராட்சி | குறைந்தபட்ச பொதுக்கல்வி தகுதி | ரூ.4800–10000+நிலை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பணியாளரின்<br>வாரிசுதாரர்களை நியமனம்<br>செய்வதன் மூலம்<br><br>2) அனைத்து கீழ் வகை<br>பதவியிடங்களிலிருந்து<br>பதவி உயர்வு மூலம்.<br>கீழ்நிலை பதவியில்<br>இரண்டு ஆண்டுகள்<br>பணிபுரிந்திருக்க<br>வேண்டும்<br><br>3) நேரடி நியமனத்தின்<br>மூலம் | | ஊதியம்<br>ரூ.1400<br>அட்டவணை<br>எண்.2<br><u>நிர்ணய நாள்</u><br>ஒவ்வோர்<br>ஆண்டும்<br>அக்டோபர்<br>1ம் நாள் | |
| 7 | தலைமை நிருபர் | நிருபர் பதவியிலிருந்து<br>பதவி உயர்வின் மூலம் | | **ரூ.9300–<br>34800+நிலை<br>ஊதியம்<br>ரூ.4700**<br>அட்டவணை<br>எண்.12<br><u>நிர்ணய நாள்</u><br>ஒவ்வோர்<br>ஆண்டும் ஜனவரி<br>1ம் நாள் | பணிமூப்பு<br>அடிப்படையில்<br>பதவி உயர்வு |
| 8 | நிருபர்/<br>சுருக்கெழுத்து<br>தட்டச்சர், நிலை–1 | சுருக்கெழுத்து தட்டச்சர்<br>நிலை–2லிருந்து பதவி<br>உயர்வு மூலம் | 1) அரசு தொழில் நுட்ப<br>தேர்வில் தமிழ்மொழி மற்றும்<br>ஆங்கில மொழியில் தட்டச்சு<br>தேர்வு உயர்நிலையில்<br>தேர்ச்சி<br>2) அரசு தொழில் நுட்ப அதி<br>வேகத் தேர்வில்<br>தமிழ்மொழியில்<br>சுருக்கெழுத்து தேர்ச்சி<br>(நிருபர் மட்டும்)<br><br>3) அரசு தொழில் நுட்ப<br>தேர்வில் ஆங்கிலம் மற்றும்<br>தமிழ் மொழியில்<br>சுருக்கெழுத்து உயர்நிலைத்<br>தேர்வில் தேர்ச்சி அல்லது<br>தமிழில் உயர்நிலை<br>ஆங்கிலத்தில் கீழ்நிலை<br>அல்லது ஆங்கிலத்தில்<br>உயர்நிலை தமிழில்<br>கீழ்நிலை<br>4) எம்.எஸ். ஆபீஸ்<br>(விண்டோஸ்) படிப்பில்<br>தேர்ச்சி | ரூ.9300–<br>34800+நிலை<br>ஊதியம்<br>ரூ.4300<br>அட்டவணை<br>எண்.12<br><br><u>நிர்ணய நாள்</u><br>ஒவ்வோர்<br>ஆண்டும்<br>ஜூலை 1ம் நாள் | |
| 9 | சுருக்கெழுத்து<br>தட்டச்சர்<br>நிலை–2 | சுருக்கெழுத்து மற்றும்<br>தட்டச்சர் நிலை–3லிருந்து<br>தகுதிகாண் பருவம்<br>முடித்தவர்களுக்கு பதவி<br>உயர்வின் மூலம் | 1) குறைந்த<br>பட்ச பொதுக்<br>கல்வி தகுதி<br><br>2) அரசு தொழில் நுட்ப<br>தட்டச்சு தேர்வில்<br>தமிழ்மொழி மற்றும் ஆங்கில<br>மொழியில் உயர்நிலையில்<br>தேர்ச்சி<br>3) அரசு தொழில் நுட்ப<br>சுருக்கெழுத்து தேர்வில் | ரூ.9300–34800+<br>நிலை ஊதியம்<br>ரூ.4200<br>அட்டவணை<br>எண்.11<br><u>நிர்ணய நாள்</u><br>ஒவ்வோர்<br>ஆண்டும்<br>அக்டோபர்<br>1ம் நாள் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் உயர்நிலையில் தேர்ச்சி அல்லது தமிழில் உயர்நிலை ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது ஆங்கிலத்தில் உயர்நிலை தமிழில் கீழ்நிலையில் தேர்ச்சி<br>4) எம்.எஸ். ஆபீஸ் (விண்டோஸ்) படிப்பில் தேர்ச்சி | | |
| 10 | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–3 | 1) அனைத்து கீழ் வகை பதவியிடங்களில் இருந்து தகுதி காண் பருவம் முடித்தவர்களுக்கு பதவி உயர்வின் மூலம் பணியாளர்கள் 2 ஆண்டுகால தகுதியுள்ள பணிக்காலத்தை முடித்திருக்க வேண்டும்<br><br>2) வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேரடி நியமனம் | 1) குறைந்த பட்ச பொதுக் கல்வி தகுதி<br><br>2) அரசு தொழில் நுட்ப தட்டச்சு தேர்வில் தமிழ்மொழி மற்றும் ஆங்கில மொழியில் உயர்நிலையில் தேர்ச்சி<br><br>3) அரசு தொழில் நுட்ப சுருக்கெழுத்து தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சுருக்கெழுத்து உயர்நிலைத் தேர்வில் தேர்ச்சி அல்லது தமிழில் உயர்நிலை ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது ஆங்கிலத்தில் உயர்நிலை தமிழில் கீழ்நிலை<br><br>4) எம்.எஸ். ஆபீஸ் (விண்டோஸ்) படிப்பில் தேர்ச்சி | ரூ.5200–20200+ நிலை ஊதியம் ரூ.2800 அட்டவணை எண்.8<br><br><u>நிர்ணய நாள்</u> ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 1ம் நாள் | |
| 11 | தட்டச்சர் | 1. பதிவுரு எழுத்தர் பதவியிலிருந்து தகுதி காண் பருவம் முடித்தவர்கள், பணி நியமனம் செய்யப்பட்ட பதவியில் 2 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும்<br><br>2) பணிக்காலத்தில் காலஞ்சென்ற மாநகராட்சிப் பணியாளர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர்களை நியமனம் செய்தல்<br><br>3) வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேரடி நியமனம் | 1) குறைந்த பட்ச பொதுக்கல்வி தகுதி<br><br>2) அரசு தொழில் நுட்ப தேர்வில் தட்டச்சுத் தேர்வில் கீழ்கண்டவாறு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>a. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலையில் தேர்ச்சி<br><br>அல்லது<br><br>b. தமிழ் மொழியில் உயர்நிலை தேர்ச்சி மற்றும் ஆங்கில மொழியில் கீழ் நிலை தேர்ச்சி<br><br>அல்லது<br><br>c. ஆங்கில மொழியில் உயர்நிலை தேர்ச்சி மற்றும் தமிழ் மொழியில் கீழ் நிலை தேர்ச்சி<br>3) எம்.எஸ். ஆபீஸ் (விண்டோஸ்) படிப்பில் தேர்ச்சி | ரூ.5200–20200+ நிலை ஊதியம் ரூ.2400 அட்டவணை எண்.6<br><br><u>நிர்ணய நாள்</u> ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 1ம் நாள் | ஒரு குறிப்பிட்ட ஆண்டில், <u>ஊட்டப்</u> பதவியில் இருந்து தகுதியான பணியாளர்கள் அனைவரையும் பதவி உயர்வு செய்த பின்னர், அதே ஆண்டில் எஞ்சிய காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும். |

| வருவாய்த்துறை பணி விதிகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வரி மதிப்பீட்டாளர் | உரிமம் ஆய்வாளர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம் | சார்நிலை பணியாளர் களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் 2 தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வில் தேர்ச்சி | ரூ.9300–34800+நிலை ஊதியம் ரூ.4800<br>நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 1ம் நாள் | பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு |
| 2 | உரிமம் ஆய்வாளர் | 1:1:3 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு மூலம்<br>12 ஆண்டுகள் பணி முடித்த ஒரு பட்டதாரி வரி வசூலிப்பவர்<br>12 ஆண்டுகள் பணி முடித்த ஒரு பட்டதாரி அல்லாத உதவியாளர்<br>3 பட்டதாரி உதவியாளர்கள் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு பட்டம்<br>(10th – 12th – UG –PG)<br>சார்நிலை பணியாளர் களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1 மற்றும் மற்றும் தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வில் தேர்ச்சி | ரூ.9300–34800+நிலை ஊதியம் ரூ.4200<br>நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1ம் நாள் | உதவியாளர் மற்றும் வரி வசூலிப்பவர் பதவியிலிருந்து விருப்பத்தின் அடிப்படையில் |
| 3 | வரி வசூலிப்பவர் | 1. அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்<br>2. கீழ் நிலைப்பதவியில் 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும்<br>நேரடி நியமனம் மூலம் | குறைந்தபட்ச பொது கல்வி தகுதி | ரூ.5200–20200+ தகுதி உள்ள தர ஊதியம்<br>நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜுலை 1ம் நாள் | ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஊட்டப் பதவியில் இருந்து தகுதியான பணியாளர்கள் அனைவரையும் பதவி உயர்வு செய்த பின்னர், அதே ஆண்டில் எஞ்சிய காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும். |

| துப்புரவு பணி விதிகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | துப்புரவு மேற்பார்வையாளர் | 1. துப்புரவு ஆய்வாளர் பதவியில்ருந்து பதவி உயர்வின் மூலம்<br><br>2, துப்ரவு ஆய்வாளர் பதவியில் இரண்டு ஆண்டு காலம் பணிபுரிந்து இருக்க வேண்டும் | குறைந்த பட்ச பொது கல்வி தகுதி | ரூ.9300–34800+நிலை ஊதியம் ரூ.4200<br>நிர்ணய நாள்<br>ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1ம் நாள் | பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு |
| 2 | துப்புரவு ஆய்வாளர் | 1, துப்புரவு மேஸ்திரி / பதிவுரு எழுத்தர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம்<br><br>2, துப்புரவு மேஸ்திரி/ பதிவுரு எழுத்தர் ஆகிய பதவியில் மூன்று ஆண்டு காலம் பணிபுரிந்து இருக்க வேண்டும்<br><br>3, நேரடி நியமனம் மூலம் | குறைந்த பட்ச பொது கல்வி தகுதி | ரூ.5200–20200+ நிலை ஊதியம் ரூ.2000 அட்டவணை எண்.6<br>நிர்ணய நாள்<br>ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 1ம் நாள் | பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு<br><br>துப்புரவு மேஸ்திரி பதவியில் போதுமான நபர்கள் இல்லாத பட்சத்தில் பதிவுரு எழுத்தர் பதவியிலிருந்து பதவி உயர்வு |
| 3 | துப்புரவு மேஸ்திரி | 1, துப்புரவு பணியாளர்களிலிருந்து பதவி உயர்வு மூலம்<br><br>2, தகுதி காண் பருவம் முடித்து இருக்க வேண்டும் துப்புரவு பணியாளர் பதவியில் 5 ஆண்டுகள் பணிபுரிந்தும் இருக்க வேண்டும் | 8ம் வகுப்பு தேர்ச்சி | ரூ.4800–10000+நிலை ஊதியம் ரூ.1400 அட்டவணை எண்.2<br>நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் மே 1 நாள் | பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு |

1. தமிழ்நாடு மாநில சார்நிலைப் பணி விதிகளில் கொண்டுவரப்படும் எந்தவொரு திருத்தமும், இத்துணை விதிகளில் எங்கெல்லாம் குறிப்பாக சொல்லப்பட்டுள்ளதோ, அவற்றிற்கு பொருந்தும்

2. மேலே குறிப்பிட்டுள்ள பதவியிடங்களுக்கு இணையான பதவியிடங்கள் வேறு பெயருடன் ஒரே கால விகிதச் சம்பள முறையுடன் இருப்பின், அவற்றையும் ஆணையரின் முடிவுக்குட்பட்டு இத்துணை விதிகளின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

குறிப்பு:– பதவி உயர்வின் மூலம் என்றும் நேரடி நியமனம் மூலம் என்றும் மற்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளில் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்தவர் இல்லாத நிலையிலேயே நேரடி நியமனங்கள் செய்யப்பட வேண்டும். ஆயினும் பதவி உயர்வுக்கும் நேரடி நியமனத்திற்கும் விதிதாச்சாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு இந்த முறை பொருந்தாது.

வயது தொடர்பான தகுதி:– பணி வகைகளில் எந்தவொரு பணிக்கும் பணி நியமனத்திற்கான வயது வரம்பு, தமிழ்நாடு மாநில சார்நிலை பணி விதிகளில் வகுத்தவாறு நிர்ணயிக்கப்படும்.

தகுதிகாண் பருவம்:– பணி வகுப்பு III–ன் எந்த ஒரு வகையிலும் நியமனம் செய்யப்படும் ஒவ்வொருவரும், தொடர்ச்சியான மூன்றாண்டுகளுக்குள் இரண்டு ஆண்டுகள், அவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து, தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும்.

நியமனத்தில் ஒதுக்கீடு:– இந்த துணை விதிகளின் கீழ் செய்யப்படும் நேரடி நியமனங்களுக்கு ஒதுக்கீடு விதிமுறைகள் (Rule Reservation ) பொருந்தும்.

தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி: ஒரு பணியின் வகையில் நியமனம் செய்யப்பட்ட, முதல் மொழியாக தமிழை தவிர வேறு மொழி படித்தவர்கள், தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில், அவர்கள் தகுதிகாண் பருவத்திற்குள்(அதாவது இரண்டாண்டுகளுக்குள்) தேர்ச்சி பெற வேண்டும்.

தவறினால், மூன்றாவது ஆண்டிலிருந்து அவர்களின் ஆண்டு ஊதிய உயர்வு, அவர்கள் அந்த தகுதியினை பெறும் வரையில் நிறுத்தப்படும். பணியில் சேர்ந்த 5 ஆண்டு காலத்திற்குள் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும், தவறினால் அவர்கள் உடனடியாக பணி நீக்கம் செய்யப்படுவர்.

தேர்வு:- நிர்ணய (மைய) நாளுக்கு முன்னரே, துறைத் தேர்வுகள் எழுதி தேர்ச்சி பெற்றவர்கள் (தேர்வு முடிவுகள் அரசிதழில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்) மட்டுமே பதவி உயர்வு பணியிடங்களுக்கு தகுதியுடைவர்களாவர்.

ஊதிய விகிதம்: துணை விதிகளில் தற்போதுள்ள ஊதிய விகிதம் மற்றும் தர ஊதியம் குறிப்பிடப்பட்டுள்ளது ஊதிய விகிதத்தில் மாற்றம் செய்து அரசு ஆணைகள் வெளியிட்டால்
அவ்வூதிய விகிதம் மற்றும் தர ஊதியம் மேற்கண்ட பதவிகளுக்கு பொருந்தும்

பாதுகாப்பு :– இந்த சட்டவிதிகள் அமலுக்கு வரும் நாளில், இந்த சட்ட விதிகளில் குறிப்பிடப்படும் எந்த ஒரு பணிக்கான பணிவகையில் பணியில் இருக்கும் எவருக்கும் இந்த சட்ட விதிகள் பாதிப்பு ஏற்படாவண்ணம் இந்த விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.